**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.244/2018**

**இ.ம.எண்.09/2025**

1) ஆறுமுகம்

2) பழனிச்சாமி (எ) முருகன்

3) பொன்னம்மாள்

4) சரசு

5) மணி (எ) மாரியப்பன்

6) கண்ணதாசன்

7) ரத்தினம்

8) தனம்

9) லட்சுமி **மனுதாரர்கள்/2 முதல் 10 பிரதிவாதிகள்**

**/எதிர்/**

1) ரவிச்சந்திரன் **எதிர்மனுதாரர்/வாதி**

2) செல்வராஜ் **எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி**

இம்மனு எனது முன்னிலையில் இன்று 31.10.2025ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.I.முகமது ஜாபர் சேட் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.செல்வநன்மாறன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

## உத்தரவு

மனுவில் கண்டுள்ள ஆவணங்களை கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அளவையர் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டுமெனக்கோரி உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 76 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:**

2) மனுதாரர்கள் மேற்படி வழக்கின் பிரதிவாதிகள் ஆவார்கள். மேற்படி வழக்கு பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பு கட்சியை நிரூபிக்கும் பொருட்டு கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், மஞ்சாநாயக்கன்பட்டி கிராமம் புல எண்கள்.74 மற்றும் 76 வழியாக பாதை உள்ளது என்றும், வாதிக்கு புல எண்.75ல் பாதை இல்லை என்பதை நிரூபிக்கும் பொருட்டு மேற்படி கிராம புல எண்கள்.74, 75, 76 மற்றும் 77 ஆகியவற்றை பொறுத்து காட்டக்கூடிய தொகுப்பு Topo Sketch புல பட சான்றிட்ட நகல் மற்றும் அசல் ஆவணங்களை மனுவில் கண்ட சாட்சிக்கு இந்நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பி விசாரிக்க உத்தரவிட வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமும் நியாயமுமாய் இருக்கிறது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் கிடையாது. இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரர்களுக்கு ஏராளமான கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் உரை ஆட்சேபணையின் சுருக்கம்:**

3) இம்மனு சட்டப்படி நிலைக்கக்கூடியது அல்ல. கால விரையம் ஏற்படுத்தும் நோக்கத்தோடு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கூறியுள்ள காரணம் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் கோரியுள்ள ஆவணங்கள்

பொது ஆவணங்கள் என்பதால் அவற்றின் சான்றிட்ட நகல் பெறமுடியும். ஆனால் அதை தவிர்த்து உள்நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

4) <u>**தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:**</u>

இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா?

5) <u>**சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**</u>

இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

<u>**தீர்வு:**</u>

6) தாவா வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் ஆவணம் தாக்கல் செய்ய வேண்டுமென்றும், அந்த ஆவணங்கள் கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அளவையர் வசம் உள்ளதால் அவற்றை மேற்படி அளவையரை நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பி விசாரிக்க உத்தரவிட வேண்டுமென்று மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டது.

7) எதிர்மனுதாரர் தரப்பில் கூறியபடியே மனுதாரர்கள் கேட்டுள்ள ஆவணங்கள் பொது ஆவணங்கள் என்பதால், அவற்றின் சான்றிட்ட நகல் பெற்று தாக்கல் செய்ய முடியும். மனுதாரர்கள் தரப்பில் மேற்கண்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்திருந்தாலும் அந்த ஆவணங்களின் உண்மை தன்மையை நிரூபிப்பதற்கு அசல் ஆவணத்தை

தாக்கல் செய்தால் மட்டுமே நிரூபிக்க முடியும் என்றும், மேற்கண்ட ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பு வழக்கை நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் என மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்களை நீதிமன்றத்திற்கு வரவழைப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2025.11.12 15:40:37 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

| | | |
|---|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2025.11.12 15:40:44 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**